செ.வெ.எண்: 119 நாள்: 7.2.2011

# செய்தி வெளியீடு–7.2.2011

## போக்குவரத்துத் துறையில் மோட்டார் வாகன ஆய்வாளர்களாக 57 பேருக்குப் பணிநியமன ஆணைகள்! மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வழங்கினார்!

தமிழக அரசின் போக்குவரத்துத் துறை மாநிலத்தின் சமூக–பொருளாதார வளர்ச்சியில் மிக முக்கியமான பங்கு வகிக்கிறது. பொதுமக்களின் தேவைக்கேற்ப போக்குவரத்து வசதிகளைச் செயல்படுத்துதல், சாலைப் பாதுகாப்பினை மேம்படுத்துதல், ஓட்டுநர் உரிமம் வழங்குதல், வாகனங்களைப் பதிவு செய்தல் போன்ற சிறப்பான பல சேவைகளைச் செய்வதில் மோட்டார் வாகன ஆய்வாளர்களின் பங்கு மிகவும் இன்றியமையாததாகும்.

தமிழ்நாட்டில் இன்றைய தினம் மொத்தம் ஒரு கோடியே 32 இலட்சத்து 20 ஆயிரத்து 752 வாகனங்கள் இயக்கப்படுகின்றன. போக்குவரத்துத் துறை அரசுக்கு, ஆண்டுதோறும் சராசரியாக 2 ஆயிரத்து 400 கோடி ரூபாய் வருவாய் ஈட்டித் தருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் போக்குவரத்துத் துறையில் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கென பெருமளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவ்வகையில் 7 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 43 புதிய அலுவலகங்கள் உருவாக்கப்பட்டும், 35 கோடியே 82 இலட்சம் ரூபாய்ச் செலவில் 39 புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டும் 4 கோடியே 90 இலட்சம் ரூபாய்ச் செலவில் 17 புதிய ஓட்டுநர் தேர்வுத் தளங்கள் அமைக்கப்பட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 82 கோடியே 80 இலட்சம் ரூபாய்ச் செலவில் சாலைப் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெருகிவரும் வாகன எண்ணிக்கையினைக் கருத்தில் கொண்டு கடந்த நான்கரை ஆண்டுகளில் இத்துறையின் பணிகள் மேலும் முறையாக நடைபெற உதவும் வகையில் 243 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டதுடன் இதுவரை மொத்தம் 330 பணியாளர்கள் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இத்துறையில், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் நிலையில் உள்ள 333 பணியிடங்களில் தற்போது 203 மோட்டார் வாகன ஆய்வாளர்கள் பணிபுரிகின்றனர். எஞ்சிய காலிப் பணியிடங்களில் ஏற்கனவே 47 இரண்டாம் நிலை மோட்டார் வாகன ஆய்வாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தற்போது, மேலும் 57 இரண்டாம் நிலை மோட்டார் வாகன ஆய்வாளர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குரிய பணி நியமன ஆணைகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று வழங்கினார்கள்.

இந்நிகழ்வின்போது, போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, உள்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., போக்குவரத்து ஆணையர் டாக்டர் மூ. இராசாராம், இ.ஆ.ப., ஆகியோரும், போக்குவரத்துத் துறை உயரதிகாரிகளும் உடனிருந்தனர்.

***

வெளியீடு; இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9